அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்

# ஆண்டு 8

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **சுட்டெண்:** | |

## பகுதி – 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய்க்குறில் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. ☐ ஏழு
   2. ☐ பன்னிரண்டு
   3. ☐ தொண்ணூறு
   4. ☐ ஐந்து

2. சுவிற்சர்லாந்து நாடு அழகிய உயர்ந்த வரைகளைக் கொண்டது. வரை என்பது
   1. ☐ கடல்
   2. ☐ மலை
   3. ☐ ஆறு
   4. ☐ பனி

3. எழுபத்தைந்தாவது ஆண்டுநிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. ☐ பவளவிழா
   2. ☐ பொன்விழா
   3. ☐ வெள்ளிவிழா
   4. ☐ வைரவிழா

4. சங்கமருவிய காலப்பகுதியில் இயற்றப்பட்ட நூல்களின் தொகுப்பு
   1. ☐ பதினெண்மேற்கணக்கு
   2. ☐ சிற்றிலக்கியம்
   3. ☐ பேரிலக்கியம்
   4. ☐ பதினெண்கீழ்க்கணக்கு

5. பண்டைத்தமிழர் ஏழிசையைக் குறிக்கப் பயன்படுத்திய எழுத்துகள்
   1. ☐ உயிர்க்குறில்
   2. ☐ உயிர்நெடில்
   3. ☐ மெய்
   4. ☐ உயிர்மெய்

6. எல்லாள மன்னனின் நினைவு மண்டபம் அமைந்துள்ள இடம்
   1. ☐ யாழ்ப்பாணம்
   2. ☐ மன்னார்
   3. ☐ அநுராதபுரம்
   4. ☐ கொழும்பு

7. நிலத்தில் ஏற்படும் மாற்றங்களால் தோன்றும் இயற்கை அழிவுகளில் ஒன்று

1. ☐ சூறாவளி
2. ☐ வெள்ளப்பெருக்கு
3. ☐ கதிர்வீச்சு
4. ☐ எரிமலை

8. எறும்புகளை உற்றுப்பார்; எத்தனை ஒற்றுமை வியந்து பார். ஒற்றுமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்

1. ☐ நட்பு
2. ☐ வேற்றுமை
3. ☐ மகிழ்வு
4. ☐ பரிவு

9. ஏழ்மையாய் இருந்தாலும் ஈழவன் சிறப்பாகக் கற்றான். இதில் கற்றான் என்பதில் வந்துள்ள இறந்தகால இடைநிலை

1. ☐ ஆன்
2. ☐ ன்
3. ☐ ற்
4. ☐ இன்

10. சிறுமி குழலி அழகான ஓவியத்தை விரைவாய் வரைந்தாள். இதில் வந்துள்ள செயப்படுபொருள் அடைமொழி

1. ☐ அழகான
2. ☐ சிறுமி
3. ☐ ஓவியம்
4. ☐ விரைவாய்

11. பண்டாரவன்னிய மன்னனின் வரலாற்றுச் சான்றாக விளங்கும் ஊர்களுள் ஒன்று

1. ☐ அம்பாறை
2. ☐ யாழ்ப்பாணம்
3. ☐ மட்டக்களப்பு
4. ☐ பனங்காமம்

12. நிழலின் அருமை வெயிலில் தெரியும் எனும் பழமொழி குறிக்கும் பொருள்

1. ☐ தொடர் பயிற்சி திறனை வளர்க்கும்
2. ☐ உண்மையின் உயர்வு
3. ☐ வறுமையில் செம்மை
4. ☐ ஒன்று இல்லாத போதுதான் அதன் பெருமை விளங்கும்

13. புலம்பெயர்ந்த இளையோர் தாயகத்து உறவுகளுக்குத் தோள்கொடுத்து வருகின்றனர். தோள்கொடுத்தல் எனும் மரபுத்தொடர் குறிப்பது

1. ☐ உறுதுணையாக நிற்றல்
2. ☐ நட்டத்தை உண்டாக்கல்
3. ☐ நன்றி மறத்தல்
4. ☐ ஏமாற்றுதல்

14. எமது தாய்மொழியாம் தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. தொன்மை என்பது

1. ☐ புதுமை
2. ☐ அழகு
3. ☐ பழைமை
4. ☐ விந்தை

15. மாலதி ஆசிரியப்படிப்பை முடித்து வேலை பார்க்கிறாள். முடித்து என்பது

1. ☐ பெயரெச்சம்
2. ☐ வினைமுற்று
3. ☐ எதிர்மறை
4. ☐ வினையெச்சம்

16. ஈழத்தின் பெருந்தோட்டப் பயிர்களுள் ஒன்று

1. ☐ நெல்
2. ☐ தேயிலை
3. ☐ புகையிலை
4. ☐ பனை

17. தமிழ் + இலக்கணம் என்பதன் சொற்புணர்ச்சி வடிவம்

1. ☐ தமிழ்இலக்கணம்
2. ☐ தமிளிலக்கணம்
3. ☐ தமிழ்ழிலக்கணம்
4. ☐ தமிழிலக்கணம்

18. “அணுவைத்துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத்தரித்த குறள்” எனத் திருக்குறளை வியந்து கூறியவர்

1. ☐ பாரதியார்
2. ☐ ஔவையார்
3. ☐ இளங்கோ
4. ☐ கம்பர்

19. கார்காலம் வந்ததும் கார்த்திகை பூத்தது. இச்சொல்லியத்தில் வந்துள்ள ஆகுபெயர்

1. ☐ குணவாகுபெயர்
2. ☐ இடவாகுபெயர்
3. ☐ காலவாகுபெயர்
4. ☐ பொருளாகுபெயர்

20. நோய்த்தொற்று அதிகம் காணப்படுவதால் தேவையின்றி வெளியில் போகாதீர்கள். இச்சொல்லியம்

1. ☐ உடன்பாட்டு ஏவல் ஒருமை
2. ☐ எதிர்மறை ஏவல் ஒருமை
3. ☐ எதிர்மறை ஏவல் பன்மை
4. ☐ உடன்பாட்டு ஏவல் பன்மை

21. குயில் கூவும் அதுபோல மயில்

1. ☐ அகவும்
2. ☐ பேசும்
3. ☐ கரையும்
4. ☐ கத்தும்

22. விளையாட்டுத் திடலில் சிறுவர்கள் ஓடி ஓடி விளையாடினார்கள். ஓடி ஓடி என்பது

1. ☐ இணைமொழி
2. ☐ அடுக்குத்தொடர்
3. ☐ இரட்டைக்கிளவி
4. ☐ அடுக்கிடுக்குத்தொடர்

23. தமிழிசையின் தொன்மைக்குச் சான்றாக விளங்கும் நூல்களுள் ஒன்று

1. ☐ திருக்குறள்
2. ☐ நாலடியார்
3. ☐ சிலப்பதிகாரம்
4. ☐ புறநானூறு

24. நெற்பயிர் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்

1. ☐ நெல் + பயிர்
2. ☐ நெற் + பயிர்
3. ☐ நென் + பயிர்
4. ☐ நெற்ப் + பயிர்

25. டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் எழுதிய நூல்களுள் ஒன்று

1. ☐ பொன்னியின் செல்வன்
2. ☐ மனிதனின் சரித்திரம்
3. ☐ கந்தப்ப சபதம்
4. ☐ அக்கினிச் சிறகுகள்

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. புலப்பெயர்வு

______________________________

______________________________

2. அறநூல்

______________________________

______________________________

(2X1=2 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நரம்புக்கருவி, துளைக்கருவி என்பவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   நரம்புக்கருவி: ______________ துளைக்கருவி: ______________

2. திருக்குறளை இலத்தீன்மொழியில் மொழிபெயர்த்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

   ______________________________

3. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்தமிழர் புலம்பெயரக் காரணம் யாது?

   ______________________________

4. மகாகவி து. உருத்திரமூர்த்தியின் இலக்கிய வடிவங்கள் இரண்டு எழுதுக.

   ______________________________

5. வெண்கம்பளம் விரித்தாற்போன்று நிலமெங்கும் பனித்துகள்கள் பரந்து காணப்பட்டன. இதில் வந்துள்ள உவமை அணி உறுப்புகளை எழுதுக.

   உவமானம்: ______________ உருபு: ______________

   உவமேயம்: ______________ பொதுத்தன்மை: ______________

6. மாணவர்களுக்குத் தகுந்தது நல்லொழுக்கம் ஆகும். இச்சொல்லியத்தில் வந்துள்ள வேற்றுமை உருபையும் பொருளையும் எழுதுக.

______________________________________________

7. நெடுந்தீவு, பசுந்தீவு எனவும் அழைக்கப்படுகிறது.
நெடுந்தீவு பனைவளமும் கடல்வளமும் கொண்டது.

இத்தனிச்சொல்லியங்களைத் தொடர்ச்சொல்லியமாக எழுதுக.

______________________________________________

______________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை இதை வந்து கடல் கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்.

வெறுவான வெளிமீது மழைவந்து சீறும்
வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
நெறிமாறுபட நூறு சுழி வந்து சூழும்
நிலையான தரை நீரில் இலை போல் ஈடாடும்.

1. இப்பாடல் யாருடைய வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது?

______________________________________________

2. சிறு நண்டு மணல்மீது என்ன செய்யும்?

______________________________________________

3. நெறிமாறுபட கடலில் வந்து சூழ்வது எது?

______________________________________________

4. இப்பாடலைப் படிக்கும்போது ஏற்படும் உணர்வு யாது?

______________________________________________



(4X1=4 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் சொல்லியங்களைத் தமிழ்மொழியில் எழுதுக.**

(4×1=4 புள்ளிகள்)

**6. பொருத்தமான சொல்லை வைத்து சொல்லியத்தை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| வணிகத்தில் | வளம் | அன்புக்காக |
| புத்தம்புதிய | ஏனென்றால் | |

1. ஈழநாடு இயற்கை ____________________ நிறைந்தது.
2. இந்த ஆண்டு நான் தாயகம் செல்லவில்லை. ____________________ , என் பெற்றோருக்கு விடுமுறை கிடைக்கவில்லை.
3. ____________________ கவிதை நூல்கள் வெளிவந்தன.
4. பூம்புகார்ப் பட்டினம் ____________________ முதன்மை பெற்று விளங்கியது.
5. தாயின் மனம் பிள்ளைகளின் ____________________ ஏங்குகிறது.

(5×1=5 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(15 புள்ளிகள்)

1. வையகத் தமிழர்
2. தமிழிசை
3. நீங்கள் விரும்பும் தொழில்
   உள்ளடக்கக் குறிப்புகள்:
   - தொழில்களும் அவற்றின் சிறப்புகளும்
   - நீங்கள் விரும்பும் தொழிலுக்கான காரணங்களும் சிறப்புகளும்
   - பயன்கள்

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கடைச்சங்ககாலப் புலவர்கள் பாடிய பல தனிப்பாடல்கள் அவற்றின் பொருள் அளவு, பாவகை போன்றவற்றினைக் கருத்திற்கொண்டு எட்டுத்தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டன. இவற்றுள் புறப்பொருளைக் குறிக்கும் நானூறு அகவற்பாக்கள் புறநானூறுள் அடங்கும். இந்நூலினை தொகுத்தவர்கள், தொகுப்பித்தவர்கள் பெயர்களை அறியமுடியவில்லை. புறம், புறப்பாட்டு ஆகிய பெயர்களாலும் புறநானூற்றை அழைப்பர். மூவேந்தர்கள், வீரர்கள், புலவர்கள், வள்ளல்கள் போன்ற பலருடைய வரலாற்றுக் குறிப்புகளை இந்நூலில் இருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். புறநானூற்றுப் பாடல்கள் நான்கு அடி முதல் நாற்பது அடி வரையில் அமைந்துள்ளன. தமிழ்க் குமுகத்தின் அரசியல், குழுநிலைகள், கல்வி, நாகரிகம், பொருளாதாரம், கலைவளர்ச்சி முதலானவற்றையும் இச்செய்யுள்களின் ஊடாக அறியமுடிகிறது. நடுகல் வழிபாடு, பெண்களின் வீரச்செயல்கள் போன்றவற்றையும் காணலாம். இருபாற் புலவர்களுடன் அரசர்களும் பாடிய செய்யுள்கள் புறநானூற்றில் அடங்குகின்றன. புறநானூறு தமிழர்களின் தொன்மையான இலக்கியச் சொத்தாகும்.

1. புறநானூற்றின் வேறுபெயர்கள் எவை? (1 புள்ளி)

_______________________________________________

2. கடவுள் வாழ்த்துப் பாடிய புலவர் யார்? (1 புள்ளி)

_______________________________________________

3. புறநானூற்றுச் செய்யுள்கள் மூலம் நாம் எவற்றை அறிந்து கொள்ளலாம்? (2 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

4. புறநானூற்றுப் பாடல்கள் எத்தனை அடிகளில் அமைந்துள்ளன? (1 புள்ளி)

_______________________________________________

5. புறநானூற்றுப் பாடல்களில் இருந்து யார் யாருடைய வரலாற்றுக் குறிப்புகளை அறியமுடிகிறது? (2 புள்ளிகள்)

_______________________________________________

6. எட்டுத்தொகை நூல்கள் எவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன? (2 புள்ளிகள்)

_______________________________________________

(9 புள்ளிகள்)

**2. அழைப்பிதழைப் படித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

**முத்தமிழ் விழா அழைப்பிதழ்**

பன்னாட்டு கலை இலக்கிய மன்றம்
இணையவழி மூலம் நடத்தும்
முத்தமிழ் விழா

**நாள் : 24. 07. 2022 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : 9 மணி முதல் 17:30 மணி வரை**

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| *09:00* | *மங்கல விளக்கேற்றல்* | |
| *09:10* | *அகவணக்கம்* | |
| *09:15* | *வரவேற்புரை* | |
| *09:30* | *வாழ்த்துரை* | |
| *09:40* | *வில்லிசை* | *- பண்டாரவன்னியனின் படை நடந்த காடு* |
| *11:00* | *கவியரங்கம்* | *- இணைவோம் வெல்வோம்* |
| *12:00* | *மதிய இடைவேளை* | |
| *13:00* | *நாட்டியநாடகம்* | *- மானம் காத்த மறத்தமிழன்* |
| *14:00* | *பட்டிமன்றம்* | *- புலத்துவாழ்வு சுகமா? சுமையா?* |
| *15:00* | *கூத்து* | *- களத்தில் காத்தான்* |
| *16:00* | *நாடகம்* | *- வெற்றியின் வித்து* |
| *17:15* | *நன்றியுரை* | |

இன்பத்தமிழ் பருக இணையத்தில் இணைக.

இணையவழி இணைவுக்கு

**காயலை நுழைவு எண்: 227591566**
**கடவுச்சொல்: தமிழமுது**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னாட்டு கலை இலக்கிய மன்றம்

1. முத்தமிழ் விழா பன்னாட்டு கலை இலக்கிய மன்றத்தால் நடத்தப்படும். ( )
2. 'வெற்றியின் வித்து' என்ற தலைப்பில் கூத்து நடைபெறும். ( )
3. இவ்விழாவினை நேரடியாகவும் கண்டுகளிக்கலாம். ( )
4. 'பண்டாரவன்னியனின் படை நடந்த காடு' எனும் தலைப்பில் வில்லிசை நடைபெறும். ( )
5. முத்தமிழ் விழாவை இணையவழிமூலம் பார்வையிடப் பயன்படுத்த வேண்டிய கடவுச்சொல் 'தமிழமுது'. ( )
6. மதிய இடைவேளையைத் தொடர்ந்து நடைபெறுவது நாட்டிய நாடகம். ( )

(6X1=6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 02 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |